# பத்திரிக்கைச் செய்தி

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் –I இன் கீழ் சைதாப்பேட்டை, ஏஜி-டிஎம்எஸ் மற்றும் சென்னை சென்ட்ரல் நிலத்தடி மெட்ரோ நிலையக் கட்டுமானங்களின் இறுதிக்கட்டப் பணிகள், அமைப்புகளை நிறுவுதல் மற்றும் ஒருங்கிணைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்கள் இன்று (01-02-2018) நேரில் பார்வையிட்டார்கள். மேலும் சைதாப்பேட்டை முதல் ஏஜி-டிஎம்எஸ் வரையிலும் நேரு பூங்கா முதல் சென்னை சென்ட்ரல் வரையிலுமான சுரங்க வழித்தடப் பகுதிகளில் பயணிகள் சேவைகளைத் துவக்குவதற்கான ஆயத்தப் பணிகளையும் ஆய்வு செய்து, பணிகளைத் துரிதமாக முடிக்கும்படி அறிவுறுத்தினார்கள். அப்போது சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பங்கஜ் குமார் பன்சல், இ.ஆ.ப. அவர்கள், இயக்குநர் (திட்டங்கள்), இயக்குநர் (அமைப்புகள் மற்றும் இயக்குதல்), தலைமைப் பொது மேலாளர் (சுரங்கவழித்தடக் கட்டுமானம்) மற்றும் சம்பந்தப்பட்ட கட்டுமான ஒப்பந்த நிறுவனங்களின் உயர் பொறியாளர்கள் உடனிருந்தார்கள்.